
**ஜூலை – 07**

# TNPSC துளிகள்

- புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் (MoSPI) ஆனது, 2023 ஆம் ஆண்டு நிலையான மேம்பாட்டு இலக்குகள் தேசியக் குறிகாட்டி கட்டமைப்பு (NIF) முன்னேற்ற அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- இந்திய விமானப்படை (IAF) ஆனது, 'தரங் சக்தி' எனப்படும் தனது முதல் பன்னாட்டு விமானப் பயிற்சியினை நடத்தவுள்ளது.
- ஒலிம்பிக் தங்கப் பதக்கம் வென்ற நீரஜ் சோப்ரா 2023 ஆம் ஆண்டு லாசேன் டயமண்ட் லீக் போட்டியில் 87.66 மீ தொலைவு ஈட்டி எறிந்து முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

# தமிழ்நாடு செய்திகள்

## பிச்சாவரத்தில் சதுப்புநில மரங்களின் பரவலைப் பெருக்குதல்





- தமிழ்நாடு வனத்துறையானது கடலூர் மாவட்டத்தில் உயிரி சார்ந்தக் கேடயங்களை உருவாக்கச் செய்வதன் மூலம் கரையோர வாழ்விடங்களை உருவாக்குவதற்கும், மோசமடைந்த நிலையிலான சதுப்பு நிலங்களை மீளுருவாக்குவதற்குமான விரிவான திட்டத்தினை வகுத்துள்ளது.
- 2023-24 ஆம் ஆண்டில் பிச்சாவரத்தில் சதுப்பு நிலப் பரப்பை 100 ஹெக்டேர் அளவு வரை வனத் துறை அதிகரிக்கவுள்ளது.
- பிச்சாவரம் சதுப்புநிலங்கள் மாநிலத்தில் உள்ள அதிக ஆக்க வளம் கொண்ட சுற்றுச் சூழல் அமைப்புகளில் ஒன்றாகவும், பல்லுயிர்ப்பெருக்கங்களின் மீதான ஒரு முக்கியக் களஞ்சியமாகவும் உள்ளது.
- இந்தப் பகுதியில் சுமார் 840 வகையான தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் காணப் படுகின்றன.
- இவற்றில் 115 வகையான பறவைகள், 16 வகையான பாலூட்டிகள், 11 இருவாழ்விகள், 177 வகையான துடுப்புடைய மீன் இனங்கள், 95 வகையான மிதவை விலங்கின நுண்ணுயிரிகள் (ஜூப்ளாங்க்டன்), 82 மிதவைத் தாவர நுண்ணுயிரிகள் (பைட்டோ பிளாங்க்டன்), 35 வகையான வண்ணத்துப் பூச்சிகள், 17 வகை பாம்புகள் மற்றும் 3 வகையான கடல் புல் இனங்கள் ஆகியவை அடங்கும்.

- தமிழ்நாட்டில் உள்ள சதுப்புநிலங்களின் பரவல் 44.94 சதுர கிலோமீட்டர் (ச.கி.மீ) ஆக உள்ள நிலையில், இதில் சுமார் 7.73 சதுர கிலோமீட்டர் வரையிலான சதுப்பு நிலங்கள் கடலூரில் அமைந்து உள்ளது.
- பிச்சாவரத்தின் 21% பகுதியானது நீர்நிலைகளும், 27% பகுதியானது வளமான சதுப்பு நிலத் தாவரங்களும், 38% பகுதியானது ஆங்காங்கே வளர்ந்து செழித்துக் காணப்படும் சதுப்பு நிலங்களும் பரவிக் காணப் படுகின்றன.

## காவிரியில் குறைவான நீர்வரத்து

Water watch

Tamil Nadu's realisation of Cauvery water in June



| Year | Quantity realised (in tmc ft) |
|---|---|
| 2013-14 | 11.61 |
| 2014-15 | 5.978 |
| 2015-16 | 12.593 |
| 2016-17 | 2.854 |
| 2017-18 | 0.77 |
| 2018-19 | 13.29 |
| 2019-20 | 2.06 |
| 2020-21 | 6.204 |
| 2021-22 | 7.697 |
| 2022-23 | 16.458 |
| 2023-24 | 2.833 |

Tmc ft - thousand million cubic feet | **Note:** The quantity stipulated was 10 tmc ft for the period from 2013-14 to 2017-18, and 9.19 tmc ft since 2018-19

- கடந்த 10 ஆண்டுகளில் ஏழாவது முறையாக இந்த ஆண்டு ஜூன் மாதக் காவிரி நீர் வரத்து குறைவாக உள்ளது.
- ஒரு மாதத்திற்கு வேண்டிய மாநிலத்திற்கு வழங்கப் படும் நீர்வரத்துப் பங்கினை விட தமிழ்நாட்டிற்கான நீர்வரத்து என்பது குறைவாக உள்ளது.
- ஜூன் மாதத்திற்கென நிர்ணயிக்கப்பட்ட நீர்வரத்து அளவு 9.19 ஆயிரம் மில்லியன் கன அடி (tmc ft) ஆகும்.
- ஆனால் மாநிலம் 6.357 ஆயிரம் மில்லியன் கன அடிப் பற்றாக்குறையுடன், வெறும் 2.833 ஆயிரம் மில்லியன் கன அடி நீர்வரத்தினை மட்டுமே பெற்றுள்ளது.
- 2013 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை அதிகபட்சமாக 16.5 ஆயிரம் மில்லியன் கன அடி நீர்வரத்தினை மாநிலம் பெற்றுள்ளது.
- இந்த அளவானது, அதற்கான பங்கில் மூன்றில் ஒரு பங்கிற்கும் குறைவான அளவில் நீர்வரத்தினைப் பெறுகின்ற நான்காவது முறையாகும்.

- முன்னதாக 2016, 2017 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளின் ஜூன் மாதங்களில் முறையே 2.854 ஆயிரம் மில்லியன் கன அடி, 0.77 ஆயிரம் மில்லியன் கன அடி மற்றும் 2.06 ஆயிரம் மில்லியன் கன அடியாக இருந்தது.
- 2017 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் பெற்ற 0.77 ஆயிரம் மில்லியன் கன அடி நீர் வரத்து என்பது, கடந்த 10 ஆண்டுகளின் ஜூன் மாதத்திற்கான ஒரு நீர்வரத்தினை விட மிகவும் குறைவான அளவாகும்.

# தேசியச் செய்திகள்

## வேறுபட்ட நேர அடிப்படையிலான மின்சாரக் கட்டணங்கள்





- அரசானது, 2020 ஆம் ஆண்டு மின்சார (நுகர்வோர் உரிமைகள்) விதிகளில் இரண்டு மாற்றங்களைக் கொண்டு வருவதற்காக சில திருத்தங்களை மேற்கொண்டுள்ளது.
- இது ஒரு நாளில் பல்வேறு மின்சாரப் பயன்பாட்டு வீதங்களைக் கொண்டு கணக்கிடப் படும் முறை (ToD) மற்றும் திறன்மிகு மீட்டர்களின் ஒழுங்குமுறைப்படுத்தச் செய்தல் ஆகியவற்றை அறிமுகப்படுத்த உள்ளது.
- இது வழக்கமான கட்டணத்தை விட குறைந்தது 20 சதவீதம் குறைவாக இருக்கும் .
- அதே சமயம், வணிகம் மற்றும் தொழில்துறை நுகர்வோர்களுக்கு விதிக்கப்பட்ட சாதாரணக் கட்டணத்தை விட குறைந்த பட்சம் 20 சதவிகிதம் அதிகமாகவும், மற்ற நுகர்வோருக்கு விதிக்கப் பட்டக் கட்டணத்தை விட குறைந்தபட்சம் 10 சதவிகிதம் அதிகமாகவும் இருக்கும்.
- பகல் நேரத்தில், மின் கட்டணமானது 20% வரை குறையக் கூடும், இதனால் நுகர்வோர் பயனடைவார்.
- இது மின் உற்பத்தி நிறுவனங்களுக்கு உச்சநிலை மின் தேவையைச் சமன்படுத்த உதவும்.
- இது நுகர்வோர் தங்கள் நுகர்வுகளை ஒழுங்குமுறைப் படுத்தி மேலாண்மை செய்து, நுகர்வோர் தங்கள் கட்டண உயர்வினை கட்டுப்படுத்தச் செய்வதற்குமான திறனை வழங்குகிறது.
- குறைந்தது 17 ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்கா உட்பட சுமார் 20 நாடுகள், ஒரு குறிப்பிட்ட வடிவிலான அல்லது மற்றொரு வகையிலான நேர அடிப்படையிலான பல மின்சார கட்டணக் கட்டமைப்புகளைக் கொண்டுள்ளன.

## தேசிய அரிவாள் வடிவ உயிரணு இரத்த சோகை ஒழிப்புத் திட்டம்

- 2023 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டவாறு, தேசிய அரிவாள் வடிவ உயிரணு இரத்த சோகை ஒழிப்புத் திட்டமானது சமீபத்தில் தொடங்கப் பட்டது.
- அரிவாள் வடிவ உயிரணு இரத்த சோகை நோயினால் ஏற்படும் சவால்களை, குறிப்பாக

பழங்குடியின மக்களிடையே ஏற்படும் நெருக்கடியினை ஏற்படுத்தக் கூடிய சுகாதாரச் சவால்களை நிவர்த்தி செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- ஒரு பொதுச் சுகாதார பிரச்சனையாக விளங்கும் அரிவாள் வடிவ உயிரணு இரத்த சோகை நோயை 2047 ஆம் ஆண்டிற்குள் அகற்றுவதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- தமிழ்நாடு உட்பட இந்தியாவில் உள்ள 17 மாநிலங்களின் 278 மாவட்டங்களில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.
- அரிவாள் வடிவ உயிரணு இரத்த சோகை நோய் (SCA) என்பது உடல் முழுவதும் ஆக்ஸிஜனைக் கடத்துகின்ற ஹீமோகுளோபினில் தாக்கத்தை ஏற்படுத்தும் வடிவில் அமைந்த இரத்தச் சிவப்பணுக்கள் காணப்படும் நிலையினைக் குறிக்கிறது.
- உலக அளவில் பதிவான அரிவாள் வடிவ உயிரணு இரத்த சோகை நோய் எண்ணிக்கையில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.
- தேசியச் சுகாதாரத் திட்ட அறிக்கையின்படி, அரிவாள் வடிவ உயிரணு இரத்த சோகை நோய்ப் பாதிப்பானது மத்தியப் பிரதேசத்தில் அதிகமாக உள்ளது.




## CDRI தலைமையக ஒப்பந்தம்


- இந்தியாவிற்கும் பேரிடர்களுக்கான நெகிழ் திறன் கொண்ட உள்கட்டமைப்பிற்கான (CDRI) கூட்டணிக்கும் இடையிலான தலைமையக ஒப்பந்தத்திற்கு (HQA) அங்கீகாரம் அளிப்பதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- நியூயார்க் நகரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் 2019 ஆம் ஆண்டு பருவ நிலை நடவடிக்கை உச்சி மாநாட்டின் போது பிரதமர் அவர்களால் பேரிடர்களுக்கான நெகிழ் திறன் கொண்ட உள்கட்டமைப்பிற்கான (CDRI) கூட்டணி தொடங்கப்பட்டது.
- இது பருவநிலை மாற்றம் மற்றும் பேரிடர் நெகிழ்திறன் விவகாரங்கள் ஆகியவற்றில் உலகளாவியத் தலைமைத்துவத்தினைப் பெறுவதற்கான இந்தியாவின் முயற்சியாக கருதப் படுகிறது.
- 1947 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் (சிறப்புரிமை & பாதுகாப்பு) சட்டத்தின் 3வது சட்டப் பிரிவின் கீழ் கூறப்படும் பல விதிவிலக்குகள், பாதுகாப்புகள் மற்றும் சலுகைகளை

வழங்குவதற்கு இந்த அங்கீகாரம் உதவும்.




# பொருளாதாரச் செய்திகள்

## HDFC இணைப்பு




- HDFC வங்கி லிமிடெட் மற்றும் வீட்டு வசதி மேம்பாட்டு நிதி வழங்கீட்டுக் கழகம் ஆகியவற்றின் இணைப்பு ஜூலை 01 ஆம் தேதியன்று நடைபெற்றது.
- இந்த புதிய HDFC வங்கி நிறுவனமானது, சுமார் 120 மில்லியன் வாடிக்கையாளர்களைக் கொண்டிருக்கும்.
- இது ஜெர்மனியின் மக்கள் தொகையை விட அதிகமாகும்.
- இந்தப் புதிய வங்கி நிறுவனமானது, சுமார் 18 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான மொத்தச் சொத்துக்களைக் கொண்டுள்ளது.

- இந்த இணைப்பானது பங்குச் சந்தை மூலதனத்தில் உலக அளவில் நான்காவது இடத்தில் இருக்கும் கடன் வழங்கீட்டு நிறுவனத்தினை உருவாக்குகிறது.
- இது JP மோர்கன் சேஸ் & கோ, சீனத் தொழில்துறை மற்றும் வணிக வங்கி லிமிடெட் மற்றும் பாங்க் ஆஃப் அமெரிக்கா கார்ப்பரேசன் ஆகியவற்றினை அடுத்து உள்ளது.

# மாநிலச் செய்திகள்

## மெய்ரா பைபிஸ்



- மெய்ரா பைபிஸ் அமைப்பானது, மாஸ் அல்லது மணிப்பூரின் தாய்மார்கள் என்றும் அழைக்கப் படுகிறது.
- இம்பால் பள்ளத்தாக்குப் பகுதியில் உள்ள சமூகத்தின் அனைத்துப் பிரிவுகளைச் சேர்ந்த இந்த அமைப்பினர் பெருமளவில் மதிக்கப் படுகின்ற மற்றும் ஒரு சக்தி வாய்ந்த தார்மீக சக்தியைப் பிரதிபலிக்கின்ற மெய்தி இனப் பெண்கள் ஆவர்.
- அந்தக் குழுவினர் தெருக்களில் மேற்கொள்ளும் அணிவகுப்பின் போது, பெரும்பாலும் இரவில் எரியும் தீப்பந்தங்களை ஏந்திச் செல்வர் என்பதால், அவர்கள் "பெண் வழி காட்டி (ஒளிகாட்டி)" என்று அழைக்கப் படுகிறார்கள்.
- மெய்ரா பைபிஸ் சரியான முறையில் ஒழுங்கமைக்கப்படாத ஒரு அமைப்பாகும்.
- ஒரு கடுமையான அதிகாரப் படிநிலை அல்லது கட்டமைப்பு அல்லது ஒரு வெளிப்படையான அரசியல் சார்பு கொண்டில்லாத அக்குழுவினர் வழக்கமாக மூத்தப் பெண்கள் அடங்கிய குழுக்களால் வழி நடத்தப் படுகிறார்கள்.
- மெய்ரா பைபி அமைப்பு 1977 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.
- இது உலகின் மிகப்பெரிய கடைமட்ட இயக்கங்களில் ஒன்றாகும்.
- குடிப்பழக்கம் மற்றும் போதைப்பொருட்களின் தவறான பயன்பாடு ஆகியவற்றினை எதிர்த்துப் போராடுதல் போன்ற அதன் ஆரம்பகட்ட இலக்குகளைக் கொண்ட இந்த அமைப்பானது, தற்போது மனித உரிமை மீறல்களை எதிர்த்தல், சமூகத்தின் ஒட்டு மொத்த மேம்பாடு ஆகியவற்றிலும் ஈடுபாடு செலுத்த உள்ளது.
- மீரா பைபி பெண்கள் அமைப்பானது, இரோம் ஷர்மிளாவின் தீவிர ஆதரவாளர்கள்

அமைப்பாகும்.

- இவர் ஆயுதப் படைச் சிறப்பு அதிகாரச் சட்டத்திற்கு (AFSPA) எதிர்ப்பு தெரிவித்து 2000 முதல் 2016 ஆம் ஆண்டு வரை அந்த மாநிலத்தில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டவர் ஆவார்.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## துணை இந்திய அரசுத் தலைமை வழக்குரைஞர்

- துணை இந்திய அரசுத் தலைமை வழக்குரைஞராக துஷார் மேத்தா மேலும் மூன்று ஆண்டுகளுக்கு மீண்டும் நியமிக்கப் பட்டுள்ளார்.
- இந்திய அரசுத் தலைமை வழக்குரைஞருக்கு அடுத்தபடியாக இரண்டாவது உயர் நிலைச் சட்ட அதிகாரி என்பவர் துணை இந்திய அரசுத் தலைமை வழக்குரைஞர் ஆவார்.
- உச்ச நீதிமன்றத்தில் மேலும் ஆறு கூடுதல் துணை இந்திய அரசுத் தலைமை வழக்குரைஞர்களும் நியமிக்கப்பட்டனர்.
- மேத்தா 2018 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் துணை இந்திய அரசுத் தலைமை வழக்குரைஞராக தொடர்ந்து பணியாற்றுகிறார்.
- இந்திய அரசுத் தலைமை வழக்குரைஞர் நாட்டின் மிக உயர்ந்த சட்ட அதிகாரி ஆவார்.
- மூத்த வழக்கறிஞர் R .வெங்கடரமணி கடந்த ஆண்டு அக்டோபர் 01 ஆம் தேதியன்று இந்திய அரசுத் தலைமை வழக்குரைஞராக நியமிக்கப் பட்டதோடு மேலும் இவர் 2025 ஆம் ஆண்டு வரை மொத்தம் மூன்று ஆண்டுகள் பதவியில் இருப்பார்.



★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★